4. விதி 110–ன் கீழ் அறிக்கை

ஓய்வுபெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–50

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் முக்கியமானதாக விளங்குவது போக்குவரத்து வாகனங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இதில், சாலைப் போக்குவரத்து முக்கிய பங்கு வகிக்கிறது.*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போக்குவரத்துத் துறையின் மேம்பாட்டிற்காகவும், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலனை மேம்படுத்திடவும், எண்ணற்ற திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, போக்குவரத்துக் கழகங்களின் நிதிப் பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு, போக்குவரத்துக் கழகங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை அதிகப்படியான நிதி வழங்கி வந்துள்ளது.

கடந்த காலங்களில், அதிகரித்து வந்த செலவினத்தை ஈடுசெய்வதற்கு ஏற்ப, நிரந்தர நிதி ஆதாரத்தை ஏற்படுத்தாததால், போக்குவரத்துக் கழகங்கள் பெரும் நஷ்டத்தில் இயங்கின. இச்சூழ்நிலையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமையைச் சரி செய்யும் பொருட்டு, நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவதற்கான உத்திகளைக் கடைப்பிடித்ததோடு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு 2011 முதல் இந்நாள் வரை, டீசல் விலை ஏற்றத்திற்கான தொகை 2,848.36 கோடி ரூபாயை அரசு

2018 ஜனவரி 10] **[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]**

மானியமாக வழங்கியுள்ளது. மேலும், மாண்புமிகு அம்மாவின் அரசு பொது மக்களின் நலன் கருதி, போக்குவரத்துக் கட்டணத்தைக் குறைந்த அளவிலேயே பராமரித்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை, அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்திட, 5,138.57 கோடி ரூபாய் அளவிற்கு நிதி வழங்கியுள்ளது. 2017–2018 ஆம் ஆண்டில் மட்டும், ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்க 1,397.39 கோடி ரூபாயும், தற்போது பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அகவிலைப்படி உள்ளிட்ட நிலுவைத் தொகைக்காக, 291.99 கோடி ரூபாயும் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, போக்குவரத்துக் கழகங்களில் 30–11–2017 வரை பணியாற்றி ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகைக்காக 750 கோடி ரூபாயினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கும் என்பதை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்த அறிவிப்பின்மூலம் வழங்கப்படும் 750 கோடி ரூபாய் தொகையானது, போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அளிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது அரசால் வழங்கப்படும் இத்தொகையுடன் சேர்த்து, போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வுக் கால பலன்களுக்காக மட்டும், இதுவரை தமிழ்நாடு அரசு 2,147.39 கோடி ரூபாய் வழங்கியுள்ளது என்பதையும் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் பலவற்றை இந்த அரசு ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள், பொதுமக்களின் நலன் கருதி, தங்கள் போராட்டத்தை உடனடியாக கைவிட்டு, பணிக்குத் திரும்புமாறு இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள். (குறுக்கீடு) திரு. S. செம்மலை, (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

5. ஓய்வுபெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்தக் கடுமையான நிதி நெருக்கடியிலும், போக்குவரத்துக் கழகங்களின் நிதி நெருக்கடியைக் கருத்தில்கொண்டு விதி 110–ன்கீழ் 750 கோடி ரூபாய் நிதியை வழங்கிய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு காலகட்டங்களில் நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்தபோது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடத்தக்கூடிய, தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு சுமார் 10,000 கோடி ரூபாய் அளவிற்கு டீசல் மானியமாகவும், நிதியாகவும், அகவிலைப் படியாகவும் மற்றும் பல்வேறு இனங்களில் நிதிகளை கொடுத்திருக்கிறார்கள். மேலும், ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரை 9,676 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 11–55

அதுமட்டுமல்ல, இன்றைய காலகட்டத்திலே சுமார் 1,000 கோடி ரூபாய் அளவிற்கு ஊதிய உயர்வு ஒப்பந்தப் பேச்சுவார்த்தை முடிவுற்று இருக்கின்ற இந்த நிலையிலே, சில தொழிற்சங்கங்களின் தவறான வழிகாட்டுதலின் காரணமாக, கடந்த ஐந்து/ஆறு நாட்களாக போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பொங்கல் பண்டிகை வர இருக்கின்ற இந்த நேரத்திலே, 2011 தி.மு.க. ஆட்சிக் காலத்திலே போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு தரப்படாமல்